## சியம்பலாண்டுவ பிரதேச சபை

## மொனறாகலை மாவட்டம்

----------------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஜுலை 10 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 ஆகஸ்ட் 27 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஜுலை 30 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

---------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர்த்து, சியம்பலாண்டுவ பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-----------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய சம்பள மீளளிப்புத் தொகை ரூபா 943,581 இனை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய செலவுகள் ரூபா 1,706,396 தொகை தொடர்பாக கணக்கொடுத்தோரின் கீழ் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) சபைக்கு சொந்தமான RX – 1452 இலக்கம் கொண்ட பவுஸர் வண்டியின் பெறுமதி ரூபா 715,714 தொகை எனினும் அதனை நிதிக் கூற்றுக்களில் ரூபா 9,000,000 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் ரூபா 8,284,286 தொகை ஒன்று மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) முன்னைய ஆண்டு இறுதியில் உள்ளவாறு உள்ளூராட்சி ஓய்வூதிய பங்களிப்பு நிதியத்திற்கு செலுத்தப்பட வேண்டிய ரூபா 151,259 தொகையினை மீளாய்வாண்டிற்கான செலவு ஒன்றென கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாடுக் கணக்குகள்

-------------------------------------------------------------------------------------

09 கணக்கு விடயங்கள் தொடர்பாக நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 22,155,840 தொகை எனினும் துணைப் பதிவேடு பட்டோலைகளின் மற்றும் பொதுப் பேரேட்டின் பிரகாரம் ரூபா 39,184,973 ஆகும்.

1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

---------------------------------------------------------------------------------------------

பல வருட காலமாக அறவிடப்படாமல் காணப்படும் தற்போது கடமையில் இல்லாத 09 ஊழியர்களிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 40,013 இற்கான பதவியணிக் கடன் தொகையை அறவீடு செய்வதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.4 காணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

-----------------------------------------------------------------

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 132,881,045 இற்கான 03 சொத்து விடயங்களையும் ரூபா 7,650,396 இற்கான பொறுப்பு விடயம் ஒன்றினையும் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு முடியாதிருந்தது.

2 நிதி மீளாய்வு

---------------------

2.1 நிதி விளைவுகள்

---------------------------

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,321,866 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சமர்பித்திருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 4,689,691 ஆகக் காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் தேறிய குறைதல் ரூபா 2,367,825 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

-------------------------------

2.2.1 நிலுவை வருமானம்

------------------------------

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 14,248,824 இற்கான நிலுவை வருமானத்தினை 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சட்டத்தின் பிரிவு 158 மற்றும் 159 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் அறவீடு செய்திருக்கவில்லை.

2.2.2 அனுமதிப் பத்திரக் கட்டணம்

-----------------------------------------------

மீளாய்வாண்டின் போது சபையின் அதிகார பிரதேசத்தில் காணப்படும் 136 வர்த்தக நிறுவனங்களும் வியாபார அனுமதிப்பத்திரம் வழங்கி கட்டணம் அறவிடப்படாமையால் மீளாய்வாண்டின் போது ரூபா 170,750 இற்கான வருமானம் ஒன்றினை சபை இழந்துள்ளது.

2.2.3 ஏனைய வருமானங்கள்

-----------------------------------

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 149 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் 1968 இன் 14 ஆம் இலக்க சுற்றுலா அபிவிருத்திச் சட்டத்தின் கருமங்களுக்காக இலங்கை சுற்றுலா மேம்படுத்தல் அதிகார சபையில் பதிவு செய்துள்ள அல்லது அவ் அதிகார சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஹோட்டல்கள் / தங்குமிடங்களில் இருந்த குறிப்பிட்ட வருடத்திற்கு முன்னைய வருடத்திற்கான பெறுவனவுகளில் நூற்றிற்கு ஒன்றினை மேற்படாத கட்டணம் ஒன்றினை துணைவிதிகள் விதிக்கப்பட்டு அறவீடு செய்யப்பட வேண்டும் எனினும் பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்தில் காணப்படும் தங்குமிடங்களில் இருந்து அவ்வாறு கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

2.2.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைகக் கட்டணம்

-----------------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அலுவலர்களிடம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டியிருந்த தொகை பின்வருமாறு,

| | ரூபா |
|---|---|
| | ------- |
| நீதி மன்றத் தண்டப்பணம் | 2,484,970 |
| முத்திரை கட்டணம் | 1,485,400 |

2.2.5 செலுத்துகை டவர் கட்டணம்

-------------------------------------------------

சபையின் அதிகாரப் பிரதேசத்தில் பல்வேறு கம்பனிகளினால் 2012 ஆண்டின் போது நிர்மாணிக்கப்பட்டிருந்த 19 செலுத்துகை டவர்களில் இருந்து 1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 152 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் வருடாந்த வாடகை ஒன்று மீளாய்வாண்டு இறுதி வரை அறவீடு செய்திருக்கவில்லை.

2.2.6 கடை வாடகை

-------------------------

1980 திசெம்பர் 31 திகதிய இலக்கம் 1980/46 கொண்ட உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றுநிருப ஏற்பாடுகளின் பிரகாரம் சபைக்குச் சொந்தமான கடைகளின் வாடகையின் பெறுமதி மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.3 மிகை விதிப்புக்கள்

--------------------------------

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 172(3) ஏற்பாடுகளின் கீழ் பொறுப்பு வாய்ந்த நபர்களுக்கு எதிராக என்னால் விதிக்கப்பட்ட மிகை விதிப்புக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய மிகை விதிப்புக்களின் பெறுமதி ரூபா 759,593 ஆகும்.

3 செயற்பாட்டு மீளாய்வு

-----------------------------------

3.1 செயற்பாட்டு திறமையின்மை

----------------------------------------------

(அ) மின்சக்தி அமைச்சு செயலாளரின் 2010 ஆகஸ்ட் 17 திகதிய கடிதத்தின் பிரிவு 2.1 இன் பிரகாரம் வீதி விளக்குகளை செயற்படுத்துதல் மற்றும் பராமரிப்பதற்காக கட்டணம் செலுத்தும் அடிப்படையில் உள்ளூராட்சி நிறுவனங்கள் வீதி விளக்குகள் செயற்படுத்துவதற்கு மற்றும் பராமரிப்பதற்காக சேவை வழங்குனர் ஒருவராக செயற்பட வேண்டும் எனினும், அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் போது இதற்காக சபை நிதியத்தில் இருந்து ரூபா 478,539 தொகை ஒன்று செலவிடப்பட்டிருந்தது. அத்துடன் வீதி விளக்குகள் பொருத்தும் போது பொருத்தும் முறை, பொருத்த வேண்டிய விளக்குளின் வகை, எண்ணிக்கை தொடர்பாக அமைச்சுச் செயலாளரின் கடிதத்தின் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது வேலை நிருவாகி, பாதை தொழிலாளர்கள், காவலாளி, நூலக உதவியாளர் ஆகிய பதவிகளில் அமைய அல்லது பிரதியிட்டு அடிப்படையில் 2001 முதல் 2014 வரையான காலப்பகுதியில் கடமையாற்றிய ஊழியர்கள் 15 பேர்கள் நிரந்தர வேலையில் நியமமான வழங்கியிருந்த போதும் அவர்களை சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் அடங்கியிருக்கவில்லை.

3.2 பயன்படுத்தப்படாத மற்றும் குறைபயன்பாட்டுச் சொத்துக்கள்

----------------------------------------------------------------------------------------------

சபைக்குச் சொந்தமான 02 வாகனங்கள் நீண்ட காலமாக முதல் ஓட்ட நிலையில் இருந்து அகற்றப்பட்டிருந்ததுடன், இது தொடர்பாக சனாதிபதி செயலாளரின் 2013 ஜூன் 05 திகதிய இலக்கம் பீசீஎம்சீ/பீஆர்/2013 கொண்ட கடிதத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை

3.3 ஒப்பந்த நிருவாகம்

-----------------------------

இரண்டாவது சன சமூக அபிவிருத்தி மற்றும் வாழ்வாதாரத்தை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம்

------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

பிரதேச சபை கிராமங்களுக்கிடையே அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்படும் உப செயற்திட்டங்களுக்கு நிதி வழங்குவதற்காக பிரதேச சபை மற்றும் இரண்டாவது சனசமூக அபிவிருத்தி மற்றும் வாழ்வாதாரத்தை அபிவிருத்தி செய்யும்

செயற்திட்டத்திற்கிடையே 2013 நவம்பர் 21 திகதி உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்தின் கீழ் ரூபா 52,683,560 இனை மிகைக்காத தொகை ஒன்றினை பெறுவதற்கு பிரதேச சபை தகுதி பெற்றிருந்தது.

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) இந்த செயற்திட்டத்திற்காக 02 சந்தர்ப்பங்களில் ரூபா 5,917,598 இற்கான தொகையொன்று தனியார் நிறுவனம் ஒன்றிற்கு செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) உடன்படிக்கையில் பிரிவு 6 இன் பிரகாரம் செயற்பாடுகள், செயற்பாடுகளின் பொழிப்பு, செலவுப் பொழிப்பு நடைமுறைப்படுத்தும் கட்டங்கள் மற்றும் துணை செயற்திட்டத்தின் பிரேரணைக்கு நிதி வழங்குதல் தொடர்பான தகவல்கள சமர்பித்திருக்கவில்லை.

(இ) உடன்படிக்கையின் பிரிவு 9 இன் பிரகாரம் செயற்திட்டத்திற்கான நிதியினை விடுவிக்கும் போது மேற்கொள்ளப்பட்டிருந்த வேலை பகுதிகளின் அளவைகள் எடுக்கப்பட்டு கொடுப்பனவு செய்யும் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் என குறிப்பிட்டிருந்த போதும் மேற்கூறிய கொடுப்பனவு தொடர்பாக அளவை அறிக்கைகள் சமர்பித்திருக்கவில்லை.

(ஈ) இவ்வாறு கொள்வனவு செய்திருந்த பீவீசி நீர்க்குழாய்கள் மற்றும் ஏனைய பண்டங்களில் ரூபா 1,430,850 பெறுமதியான பகுதியொன்று அதாவது முதுகண்டிய இரண்டாம் கிராமத்தின் முதுசக்தி சனசமூக மூல அமைப்பிற்கு வழங்கும்படி தேசிய நீர் வழங்கல்கள் மற்றும் வடி அமைப்பு சபையின் சியம்பலாண்டுவ நிலைய பொறுப்பு அதிகாரியின் 2014 செப்டம்பர் 11 திகதிய கடிதத்தின் மூலம் பிரதேச சபை செயலாளருக்கு அறிவித்திருந்துடன் விடயத்திற்கு பொறுப்பான அலுவலரினால் அதன் பிரகாரம் நீர்க் குழாய்கள் மற்றும் பண்டங்கள் வழங்கப்பட்டிருந்தன. இந்த செயற்திட்டம் தொடர்பாக விரிவான மதிப்பீடு ஒன்று அல்லது அளவை விலைப்பட்டியல் ஒன்று சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2014 ஜூன் 24 திகதி கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 4,480,748 பெறுமதியின் நீர் குழாய்கள் மற்றும் பண்டங்கள் குறிப்பிட்ட செயற்திட்டத்திற்காக பயன்படுத்தப்படாமல 2015 ஜூலை 19 ஆந் திகதி வரையும் சபை வளவில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது.

(ஊ) 2013 நவம்பர் 21 ஆந் திகதி உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்த இந்த செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்காக கணக்காய்வுத் திகதியாகிய 2015 ஜூன் 19 திகதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

3.3.2 அமுல் நடத்தப்படாத செயற்திட்டங்கள்

---------------------------------------------------------------

(அ) மீளாய்வாண்டின் போது பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மற்றும் உள்ளுராட்சி அமைச்சின் ரூபா 5,880,529 இற்கான ஏற்பாடுகளின் மீது அமுல் நடாத்துவதற்காக திட்டமிட்டிருந்த 17 அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் காலம் போதாமை மற்றும் மிகை மழை ஆகிய காரணங்களை காட்டி அமுல்நடத்தியிருக்கவில்லை.

(ஆ) கிராமங்களுக்கு இடையிலான முன்னோடி நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் அமுல் நடத்துவதற்காக திட்டமிட்டிருந்த தொம்பகஹவெல இலத்திரயல் நூலகத்திற்கு 2012 ஆண்டின் போது இரண்டு நிறுவனங்களில் இருந்து 02 சந்தர்ப்பங்களில் ரூபா 492,939 பெறுமதியான பண்டங்கள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. 02 வருடங்கள் கடந்திருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியாகிய 2015 ஜூலை 17 திகதி வரை இந்த பண்பங்களும் உபகரணங்களும் குறைபயன்பாட்டுடன் தொம்பகஹவெல நூலகத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது.

4 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

-------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) அகக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்